**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.</u>**

**<u>அ.வ.எண். 44/1998</u>**

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2026 – ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 21 –** ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி 21.01.2026**

**பெயர் லலித் ஜி ஜெயின்**

**த/பெ கேவர்ஜன்**

**சாட்சி PW2**

**விசாரணை தொடங்கும் நேரம்– 11.49.a.m**
**<u>2 மற்றும் 4 முதல் 7 பிரதிவாதி தரப்பில்</u>**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி–</u>**

13. 1998 ல் இந்த வழக்கினை தாக்கல் செய்த போது என் தந்தை பெயரில் வழக்கு சொத்திற்கான பட்டா இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ–2 தான் நான் கூறும் பட்டா என்றால் சரிதான். என் தந்தை பெயரில் பட்டா இல்லை என்றும் 2 மற்றும் 3 ம் பிரதிவாதிகள் பெயரில் தான் வழக்கு தாக்கல் செய்த போது பட்டா இருந்தது என்றும் அது தெரிந்தும் என் தந்தை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. என் தந்தை பெயரில் தான் இருந்தது.

14. என் தந்தை வழக்கு நிலத்தில் நேரடியாக விவசாயம் செய்து வந்தாரா என்றால் நேரடியாக விவாசயம் செய்யவில்லை பிற நபர்களிடம் தான் விவசாயம் செய்ய நிலத்தை கொடுத்திருந்தார். மேற்சொன்ன சங்கதியை என் தந்தை பிராதில் குறிப்பிட்டுள்ளாரா என்றால் குறிப்பிடவில்லை, இது குறித்து நேரடியாக எனக்கு தெரியாது. 1987 ல் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பிறகு என்

தந்தைக்கும், 1ம் பிரதிவாதிக்கும் நேரடியாக எந்த தொடர்பும் இல்லை என்றால் அவர்களுக்கு அந்த சமயத்தில் தொடர்பு இருந்ததா என்று எனக்கு தெரியாது.

15. வா.சா.ஆ 6 ஆவணத்தில் என் தந்தை 1ம் பிரதிவாதி, 2 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு சொத்தினை விற்பனை செய்ததாக குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். அந்த அறிவிப்பிற்கு 2ம் பிரதிவாதி இடைக்கால பதில் அறிவிப்பு அனுப்பியிருந்தார் என்றால் சரிதான். மேற்சொன்ன அறிவிப்பை என் தந்தை அனுப்பிய பிறகு 1ம் பிரதிவாதி நேரடியாக வந்து என் தந்தையை சந்தித்தார் என்றால் சரிதான்.

16. என் தந்தையும், 1ம் பிரதிவாதியும் நேரடியாக பேசிக்கொண்ட விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் தெரியாது. 07.02.1997 ல் வா.சா.ஆ 8 ஆவணத்தின் மூலம் 1 ம் பிரதிவாதி என் தந்தைக்கு அவர் கொடுக்க வேண்டிய தொகையை 3 மாதங்களில் கொடுப்பதாக எழுதி கொடுத்த கடிதம் என்றால் சரிதான். பேசி ஒப்புகொண்ட தொகை ரூ. 4,21,000/– என்றால் சரிதான். அவ்வாறு பேசி ஒப்பு கொண்ட தொகை தான் என் தந்தைக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரிதான். வழக்கு சொத்து குறித்து 2 மற்றும் 3 பிரதிவாதிகளை எதிர்த்து நடவடிக்கை எடுக்க வாதிக்கு எந்த முகாந்தரமும் இல்லை என்றால் சரியல்ல.

17. வழக்கு சொத்தை 1ம் பிரதிவாதி ஏற்கனவே வேறு நபர்களுக்கு குத்தகைக்கு விட்டிருந்தார் என்றும் அவர்கள் வேறு ஒரு நபரிடம் பணம் பெற்று கொண்டு ஸ்வாதீனத்தை ஏழுமலை என்பவருக்கு கொடுத்துவிட்டார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்தின் சர்வே எண் 08.06.1987 ல் 1ம் பிரதிவாதி அவரிடம் பயிர் செய்தார் என்று பதிலுரையில் குறிப்பிட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்தில் என் தந்தை எந்த காலத்திலும் ஸ்வாதீனத்தில் இருந்ததில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் வாதிகள் ஸ்வாதீனத்தில் இல்லாத காரணத்தினால் 2 மற்றும் 3 பிரதிவாதிகள் தான் ஸ்வாதீனத்தில் இருப்பதால் ஸ்வாதீனத்தை மீட்டெடுக்கும் பரிகாரம் தான் கோரி இருக்க வேண்டும் என்றால் சரியல்ல. மேற்சொன்ன பரிகாரம் கோராதா காணரத்தினால் வாதிகளுகலு விளம்புகை

பரிகாரம் கிடைக்கத்தக்து அல்ல என்றால் சரியல்ல. மேற்சொன் காரணத்தினால் 2 மற்றும் 3 ம் பிரதிவாதிகளுக்கு எதிராக இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல

<u>8 முதல் 14 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில்</u>

<u>குறுக்கு விசாரணை</u>–

1. வழக்கின் விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வாதிகள் தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் குறித்தும் எனக்கு தெரியும். 1ம் பிரதிவாதிகளின் வாரிசுகளான 8 முதல் 14 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள பதிலுரை குறித்தும் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்சொன்ன பிரதிவாதிகள் தாக்கல் செய்த பதிலுரையை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்ததில்லை. வா.சா.ஆ 2 ஆவணத்தில் பட்டா எண் 201 ல் கேவர்சந்த் தந்தை பெயர் தேவன்சந்த் என குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். தவறாக குறிப்பிட்டுள்ளது.

2. வா.சா.ஆ 2 நான் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அதில் சர்வே எண் 79ல் 98 ஏர்ஸ் அதாவது 2 ஏக்கர் 42 செண்ட் என உள்ளது என்றால் சரிதான். வழக்குசொத்தின் சர்வே எண் 80/2 இரண்டு உட்பிரிவுகளாக பிரிக்கப்பட்டு சர்வே எண் 80/2 A, சர்வே எண் 80/2 B என்று பிரிக்கப்பட்டுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

**( மேலும் குறுக்கு விசாரணை செய்ய வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்திவைக்கப்படுகிறது).**

**விசாரணை முடியும் நேரம்– 12.20 பி.எம்.**